| 9152 | 2.1-Transport Equipment | | 61121 | 0.00 | 82,681,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 82,681,500.00 |
| | | Passenger vehicle | ****6112101 | 0.00 | 78,176,500.00 | 0.00 | 0.00 | 0.00 | 78,176,500.00 |
| | | Agricultural vehicle | ****6112103 | 0.00 | 4,200,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 4,200,000.00 |
| | | Motor cycle | ****6112109 | 0.00 | 305,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 305,000.00 |
| 9152 | 2.2-Other Machinary & Equipment | | 61122 | 0.00 | 138,295,935.16 | 0.00 | 17,432,328.23 | 8,573,815.50 | 147,154,447.89 |
| | | Office Equipment | ****6112201 | 0.00 | 4,167,009.08 | 0.00 | 1,432,784.65 | 59,502.00 | 5,540,291.73 |
| | | Computer Equipment | ****6112202 | 0.00 | 42,903,784.20 | 0.00 | 6,775,999.20 | 5,833,680.00 | 43,846,103.40 |
| | | Electrical Equipment | ****6112203 | 0.00 | 37,437,682.31 | 0.00 | 5,337,203.33 | 2,010,695.00 | 40,764,190.64 |
| | | Communication Equipment | ****6112204 | 0.00 | 2,981,179.55 | 0.00 | 942,348.00 | 36,175.00 | 3,887,352.55 |
| | | Furniture | ****6112205 | 0.00 | 50,739,180.02 | 0.00 | 2,890,683.05 | 633,763.50 | 52,996,099.57 |
| | | Sports equipment | ****6112208 | 0.00 | 20,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 20,000.00 |
| | | Books Periodical & Journals | ****6112210 | 0.00 | 1,400.00 | 0.00 | 0.00 | 0.00 | 1,400.00 |
| | | Construction Eqipment | ****6112213 | 0.00 | 350.00 | 0.00 | 53,310.00 | 0.00 | 53,660.00 |
| | | Agricultural & Dairy Farm Equipment | ****6112216 | 0.00 | 45,350.00 | 0.00 | 0.00 | 0.00 | 45,350.00 |
| 9153 | 4.1-Land | | 61410 | 0.00 | 29,870,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 29,870,000.00 |
| | | Land | ****614100 | 0.00 | 29,870,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 29,870,000.00 |

REMARKS
This is a computer-generated document. No signature is required.
-

Report Generated by the new CIGAS Web Application--Developed by S.Tharshan - Director, Dept of State Accounts

Print

ccNexa. All Rights Reserved. Powered by S. Tharshan-

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

ஏசிஏ-7

## பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கை

| | | |
|---|---|---|
| அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருவாய் | - | |
| மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தால் ஏற்படும் செலவு | 1,073,813,449 | |
| பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட tuT | 215,000 | |
| பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட செyT | 16,788,783 | 1,090,817,232 |
| குறைவாக: | | |
| மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடல் நிறுவனத்தால் சேகரிக்கப்படும் வருவாய் | 51,539,869 | |
| அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக மற்ற நிறுவனங்களால் செய்யப்படும் செலவு | 1,172,825 | |
| பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட செyT | 16,359,076 | |
| பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட tuT | 15,646,138 | 84,717,908 |
| 2024 டிசம்பர் 31 இல் உள்ள பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி | | 1,006,099,324 |

* மேலே குறிப்பிட்டுள்ளவற்றுக்கு கூடுதலாக ஏதேனும் தேவையெனில் சேர்க்கலாம்.

பின்னிணைப்பு-(i)

## நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று

(நி.ஒ. 106 மற்றும் நி.ஒ 113 இன் கீழான நட்டம்)

செலவினத் தலைப்பு இல: 265 மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும்

(i) வருடத்தினுள் நட்டத்தை அறவிடுதல் / வெட்டி நீக்குதல் / கைவிடுதல் பற்றிய கூற்றுக்கள்

| பெறுமதி | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| ரூபா 25,000.00 | கீழ் | 2 | 19,100 |
| ரூபா 25,000.01 | மேல் | 2 | 4,985,000 |
| மொத்தம் | | 4 | 5,004,100 |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளி வகை | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1 NPPD 4292 Accident on 23/11/2021 | 1 | 4,950,000 |
| 2 NPNB 0762 Accident on 28/11/2022 | 1 | 5,100 |
| 3 WPJQ 4923 Accident on 10/01/2023 | 1 | 35,000 |
| 4 WPPE 7584 Accident on 09/03/2024 | 1 | 14,000 |
| மொத்தம் | 4 | 5,004,100 |

(ii) தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு அல்லது கைவிடுவதற்கு இருக்கின்ற நட்டம் பற்றிய கூற்று

| பெறுமதி | | நிகழ்வுகளின் எண்ணிக்கை | முழு மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| ரூபா 25,000.00 | கீழ் | - | - |
| ரூபா 25,000.01 | மேல் | 3 | 564,065 |
| மொத்தம் | | 3 | 564,065 |

(ஐ) பிரகாரம் காலப் பகுப்பாய்வு

| | | |
|---|---|---|
| 5 வருடத்திற்குக் கீழ் | நிகழ்வுகளின் எண்ணிக்கை 7 | |
| | தொகை | ரூபா 5,568,165 |
| 5-10 வருடங்கள் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | ரூபா - |
| 10 வருடத்திற்கு மேல் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | |
| | தொகை | ரூபா - |

| நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளின் வகை | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1 WPJQ 4923 Accident on 29/11/2024 | 1 | 51,500 |
| 2 NPKQ 5417 Accident on 05/12/2024 | 1 | 430,565 |
| 3 NPPF 1937 Accident on 16/12/2024 | 1 | 82,000 |
| 4 | | |
| மொத்தம் | 3 | 564,065 |

குறிப்பு - செலவினத் தலைப்பு 1701 இன் கீழ் வருடத்தினுள் கணக்கு வைக்கப்பட்ட அல்லது முன்வரும் வருடங்களில் கணக்கு வைக்கவிருக்கின்ற நி.ஒ. 106 இன் கீழிருக்கின்ற தீங்கு மற்றும் நி.ஒ. 113 இன் கீழான கைவிடுதல் பற்றிய விபரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அறிக்கையிடும் நிறுவனங்களில் இந்த அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் இல்லை என்றால் இல்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

.....................................

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 17/07/2025

K.Yogendran
Chief Accountant
District Secretariat
Mannar.

பின்னிணைப்பு-(iii)

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

புதிய CIGAS இணைய விண்ணப்பத்தால் உருவாக்கப்பட்ட ஒட்டுமொத்த கடப்பாடு / பொறுப்பு அறிக்கை இணைப்பு எண் (iii) க்கு பதிலாக இங்கே இணைக்கப்பட வேண்டும்.

NIL

..............................................
பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 17/02/2025

K.Yogendran
Chief Accountant
District Secretariat
Mannar.

பின்னிணைப்பு-(viii)

2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் (1) ஆவது பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்ககள் பற்றிய
2024.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

செலவினத் தலைப்பு இல: 265

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

| தொடர் இல. | வங்கியின் பெயர் | கணக்கு இலக்கம் | 2024.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி | 2024.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி | 2024.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்) | இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபா.) | (ரூபா.) | | |
| 1 | இலங்கை வங்கி தப்ரபேன் | 0007041949 | - | - | - | 2024 நவம்பர் |
| 2 | இலங்கை வங்கி மன்னார் | 0007041952 | 44,363,839 | - | - | 2024 நவம்பர் |
| 3 | இலங்கை வங்கி மன்னார் | 0007041958 | 69,042,826 | - | - | 2024 நவம்பர் |
| 4 | இலங்கை வங்கி மன்னார் | 0007041959 | 30,049,448 | - | - | 2024 நவம்பர் |
| 5 | இலங்கை வங்கி மன்னார் | 0007041960 | 37,218,932 | - | - | 2024 நவம்பர் |
| 6 | இலங்கை வங்கி மன்னார் | 0007041961 | 27,462,374 | - | 100 | 2024 நவம்பர் |
| 7 | இலங்கை வங்கி மன்னார் | 0007041964 | 11,412,820 | - | - | 2024 நவம்பர் |
| | மொத்தம் | | **219,550,239** | - | **100** | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..............................................
பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 17/02/2025

K.Yogendran
Chief Accountant
District Secretariat
Mannar.

## 3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| 1003.07.02 | பதிவாளர் நாயகம் திணைக்களம் தொடர்பிலான பதிவுக் கட்டணங்கள் | - | - | 6,326,950.00 | - |
| 1003.07.03 | தனியார் மரப் போக்குவரத்து | - | - | 251,988.00 | - |
| 1003.07.05 | பாதுகாப்ப அமைச்சு தொடர்பான அனுமதிப்பத்திர வரி | - | - | 8,800.00 | - |
| 1003.07.99 | ஏனைய அனுமதிப்பத்திர வரி | - | - | 844,074.80 | - |
| 2002.01.01 | அரச கட்டடங்கள் மற்றும் வீடுகள் மீதான வாடகை | - | - | 3,716,209.92 | - |
| 2002.02.99 | பிற வட்டி | - | - | 2,727,938.17 | - |
| 2003.02.13 | பரீட்சைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் | - | - | 3,500.00 | - |
| 2003.02.14 | மோட்டார் கோக்குவரத்துச் சட்டத்தின் கீழான கட்டணங்களும் ஏனைய பெறுகைகளும் | - | - | 2,578,765.00 | - |
| 2003.02.03 | 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழான கட்டணம் | - | - | 3,027,930.00 | - |
| 2003.02.06 | பினோரா மற்றும் புளொரா பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணம் | - | - | 180,600.00 | - |
| 2003.02.99 | நானாவித வருமானங்கள் | - | - | 180,240.52 | - |
| 2003.99.00 | ஏனைய பெறுகைகள் | - | - | 8,840,390.59 | - |
| 2004.01.00 | சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு மற்றும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு | - | - | 18,175,386.50 | - |
| 2006.02.01 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை - வாகனம் | - | - | 5,276,750.00 | - |
| 2006.02.02 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை - ஏனையவை | - | - | 362,400.00 | - |
| **மொத்தம்** | | **-** | **-** | **52,501,923.50** | **-** |

## 3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | | |
| ***மீண்டுவரும் செலவினம்*** | | | | |
| **ஆளுக்குரிய வேதனங்கள்** | | | | |
| 1001 - சம்பளமும் கூலியும் | 248,500,000 | 245,000,000 | 226,432,747.75 | 92.42 |
| 1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | 6,900,000 | 6,900,000 | 5,684,250.89 | 82.38 |
| 1003 - ஏனைய கொடுப்பனவுகள் | 121,700,000 | 155,500,000 | 154,247,067.10 | 99.19 |
| **பிரையாணச் செலவினம்** | | | | |
| 1101 - உள்ளூர் | 5,600,000 | 5,490,000 | 3,964,228.69 | 72.21 |
| **வழங்கல்கள்** | | | | |
| 1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும் | 10,600,000 | 12,100,000 | 12,085,715.94 | 99.88 |
| 1202 - எரிபொருள் | | | | |
| 002- எரிபொருள் கொடுப்பனவு | 3,400,000 | 4,638,000 | 4,224,610.00 | 91.09 |
| 009- குழம வாகன எரிபொருள் | 11,200,000 | 10,762,000 | 7,614,037.26 | 70.75 |
| 010- ஏனைய எரிபொருள் செலவு | 5,100,000 | 3,000,000 | 1,422,526.20 | 47.42 |
| 1203 - உணவும் சீருடைகளும் | | | | |
| 002 - சீருடை | 180,000 | 180,000 | 114,300.00 | 63.50 |
| 1205 - ஏனையவை | 1,900,000 | 2,400,000 | 1,617,983.61 | 67.42 |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | |
| 1301 - வாகனங்கள் | 16,800,000 | 12,950,000 | 8,329,400.22 | 64.32 |
| 1302 - பொறி, இயந்திரம், உபகரணம் | 6,300,000 | 5,775,000 | 5,292,399.89 | 91.64 |
| 1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 10,900,000 | 11,010,000 | 9,203,568.03 | 83.59 |
| 1304 – மென்பொருள் பராமரிப்பு | 300,000 | 300,000 | 52,763.94 | 17.59 |
| **சேவைகள்** | | | | |
| 1401 - போக்குவரத்து | 1,500,000 | 1,500,000 | 1,282,500.00 | 85.50 |
| 1402 - தபால், தொலைத்தொடர்பு | 6,500,000 | 6,500,000 | 5,220,745.98 | 80.32 |
| 1403 - மின்சாரமும் நீரும் | 13,000,000 | 12,500,000 | 11,065,339.18 | 88.52 |
| 1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 1,200,000 | 1,200,000 | 6,800.00 | 0.57 |
| 1405 – துப்புரவு மற்றும் சுத்திகரிப்பு சேவை | 10,600,000 | 10,600,000 | 7,724,443.41 | 72.87 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1407 – பாதுகாப்பு சேவை | 4,000,000 | 8,500,000 | 7,740,932.48 | 91.07 |
| 1409 - ஏனையவை | | | | |
| 138- இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான சேவை ஒப்பந்தம் | 3,100,000 | 2,500,000 | 1,557,124.23 | 62.28 |
| 139- வாகன காப்புறுதி | 2,300,000 | 1,600,000 | 647,061.18 | 40.44 |
| 140- எதிரபாராத செலவினங்கள் | 2,900,000 | 3,875,000 | 3,054,915.60 | 78.84 |
| <u>மாற்றங்கள்</u> | | | | |
| 1504 நெல் கொள்வனவு | - | 120,868,416 | 118,471,490.00 | 98.02 |
| 1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி | 520,000 | 520,000 | 245,759.99 | 47.26 |
| **முழு மொத்தம்** | **495,000,000** | **646,168,416** | **597,302,711.57** | **92.44** |
| | | | | |
| <u>**மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்**</u> | | | | |
| 2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 32,000,000 | 32,000,000 | 30,042,820.08 | 93.88 |
| 2002 - பொறி, இயந்திரம், உபகரணம் | 4,300,000 | 4,300,000 | 2,100,950.83 | 48.86 |
| 2003 - வாகனங்கள் | 13,600,000 | 13,600,000 | 3,156,468.81 | 23.21 |
| <u>**மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு**</u> | | | | |
| 2102 - தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 12,000,000 | 12,000,000 | 11,805,405.45 | 98.38 |
| 2103 - பொறி, இயந்திரம், உபகரணம் | 5,900,000 | 5,900,000 | 5,626,922.78 | 95.37 |
| 2104 - கட்டிடங்களும், கட்டமைப்புக்களும் | 100,000,000 | 100,000,000 | 100,000,000.00 | 100 |
| <u>**மனித வள அபிவிருத்தி**</u> | | | | |
| 2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும் | 2,200,000 | 2,200,000 | 1,524,013.00 | 69.27 |
| **மொத்தம்** | **170,000,000** | **170,000,000** | **154,256,580.95** | **90.74** |
| **முழு மொத்தம்** | **665,000,000** | **816,168,416** | **751,559,292.52** | **92.08** |

## 3.7. நி.பி குறிப்பு 208 பிரகாரம் மாவட்டச் செயலக செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொ. இல | தலைப்பு | அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அசல் | இறுதி | | |
| 1. | 001 | ஜனாதிபதி செயலகம் | உறுமய தேசிய வேலைத்திட்டம், மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு வேலைத்திட்டம் | 518,834,865.00 | 518,834,865.00 | 404,898,407.52 | **78.04** |
| 2. | 020 | தேர்தல் ஆணையம் | ஜனாதிபதி தேர்தல் 2024 இற்காக கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் | 1,264,386.50 | 1,264,386.50 | 1,264,386.50 | **100** |
| 3. | 101 | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு | மாதோட்டம் ரஜ மகா விகாரையில் நீர்த்தாங்கி அமைத்தல் | 500,000.00 | 500,000.00 | 500,000.00 | **100** |
| 4. | 102 | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு | முதியோர், மாற்றுத்திறனாளர், நிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி நன்மைகள் தொடர்பான செலவுகள் | 264,885,305.00 | 264,885,305.00 | 263,050,578.17 | **99.31** |
| 5. | 103 | பாதுகாப்பு அமைச்சு | வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம், இயற்கை அனர்த்தங்களின் போதான அவசரகால வேலைகள் மற்றும் சம்பளம், ஏனைய கொடுப்பனவுள் | 100,808,161.00 | 100,808,161.00 | 90,825,812.75 | **90.10** |
| 6. | 110 | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | மத்தியஸ்தர் சபைக்கான கொடுப்பனவு, கலை மற்றும் கலாச்சார செயற்பாடுகள் | 2,825,800.00 | 2,825,800.00 | 1,665,242.50 | **58.93** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | 111 | சுகாதார அமைச்சு | குடிநீர் சுத்திகரிப்பு இயந்திர செலவு, பாரம்பரிய உணவுக்கண்காட்சி, உடற்பயிற்சி நிகம்வுகள், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 880,280.00 | 880,280.00 | 847,425.98 | **96.27** |
| 8. | 118 | விவசாய அமைச்சு | உணவுப்பாதுகாப்பு மற்றும் தொழிநுட்பம், பயிர் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 54,649,656.23 | 54,649,656.23 | 52,886,623.49 | **96.77** |
| 9. | 122 | சுற்றுலா மற்றும் காணி அமைச்சு | பிம்சவிய அலுவலகம் புனரமைப்பு, காணி சுவீகரிப்பிற்கான இழப்பீடுகள், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 2,055,510.00 | 2,055,510.00 | 1,225,587.59 | **59.62** |
| 10. | 123 | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு | வீட்டுத்திட்டம், குடிநீர் இணைப்புத்திட்டம், மின்சார இணைப்புத் திட்டம் | 60,379,236.80 | 60,379,236.80 | 57,286,272.72 | **94.88** |
| 11. | 126 | கல்வி அமைச்சு | எழுதுகருவிகள் கொள்வனவு, போக்குவரத்து கொடுப்பனவு | 220,500.00 | 220,500.00 | 145,129.53 | **65.82** |
| 12. | 130 | அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | புதிதாக இணைக்கப்பட்ட கிராம அலுவலர்களுக்கான பயிற்சிகள், மனிதவள மேம்பாட்டு பயிற்சிகள், வெளிநாட்டுப்பயண கொடுப்பனவு, சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 28,102,430.00 | 28,102,430.00 | 25,867,449.96 | **92.05** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **13.** | 149 | கைத்தொழில் அமைச்சு | விதாதா நிலையங்கள் புனரமைப்பு, விதாதா நிலையங்களுக்கான தளபாட கொள்வனவு ,தொழில்முனைவோர் வார நிகழ்வுகள் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவுகள் | 1,526,243.00 | 1,526,243.00 | 1,472,102.98 | **96.45** |
| **14.** | 160 | சுற்றாடல் அமைச்சு | உலக சுற்றாடல் தின நிகழ்வு, அபிவிருத்தி அலுவலருக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 746,900.00 | 746,900.00 | 716,589.85 | **95.94** |
| **15.** | 171 | மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு | கர்ப்பிணித்தாய்மார்களுக்கான போசாக்கு உணவு, குரு அபிமானி, முன்பள்ளிக்கான காலை உணவு, பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சிகள், சிறுவர் கழக கூட்டங்களுக்கான செலவுகள், உளவள ஆலோசனைகள், சம்பளம் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவுகள் | 88,040,015.00 | 88,040,015.00 | 87,344,987.42 | **99.21** |
| **16.** | 187 | முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு | தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான நடைமுறைச் செலவுகள் மற்றும் அபிவிருத்தி அலுவலருக்கான சம்பளம் | 8,743,213.67 | 8,743,213.67 | 8,061,805.42 | **92.21** |
| **17.** | 189 | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | கூட்டங்களுக்கான செலவு, சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 141,310.00 | 141,310.00 | 134,099.40 | **94.90** |
| **18.** | 193 | தொழில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு | போக்குவரத்து, காகிதாதி கொடுப்பனவுகள், முன்னேற்ற மீளாய்வு கூட்ட செலவு மற்றும் சிறிய, நடுத்தர வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்வுகள். | 499,770.00 | 499,770.00 | 339,645.68 | **67.96** |
| **19.** | 194 | இளைஞர் சேவை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | தளபாடம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு, இளைஞர் வலுவூட்டல் திட்டம், பயிற்சி நெறிகள், போக்குவரத்து, காகிதாதிகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் | 19,553,163.94 | 19,553,163.94 | 9,386,091.36 | **48** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **20.** | 198 | நீர்ப்பாசன அமைச்சு | வாகன திருத்தம், எரிபொருள், தொடர்பாடல் மற்றும் யோதவாவிக்கான ஏனைய மீண்டெழும் செலவுகள். | 1,801,065.00 | 1,801,065.00 | 1,639,050.39 | **91** |
| **21.** | 202 | முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் | காகிதாதி செலவுகள் | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | **100** |
| **22.** | 203 | கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் | காகிதாதி செலவுகள் மற்றும் மடுதேவாலய யாத்திரிகர் விடுதி நிர்மான செலவுகள் | 5,006,000.00 | 5,006,000.00 | 4,775,624.32 | **95.40** |
| **23.** | 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | டொலஸ்மஹே பஹன, கலைஞர்களுக்கான கௌரவிப்பு, பிராந்திய மாவட்ட இலக்கிய விழா நிகழ்வுகள், கூட்டங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் | 659,500.00 | 659,500.00 | 610,333.17 | **92.54** |
| **24.** | 210 | அரசாங்க தகவல் திணைக்களம் | செய்தித்தாள் கொள்வனவு, காகிதாதி, தொடர்பாடல் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் | 59,800.00 | 59,800.00 | 54,494.62 | **91.13** |
| **25.** | 216 | சமூக சேவைகள் திணைக்களம் | மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு, சமுதாயம்சார் மறுசீரமைப்பு திட்டம் மற்றும் சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் | 7,214,955.00 | 7,214,955.00 | 7,126,915.58 | **98.78** |
| **26.** | 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | கூட்டங்களுக்கான செலவுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், உலக சிறுவர் தின நிகழ்வு, இரட்டை குழந்தை கொடுப்பனவு, சிறுவர் பாதுகாப்பு, மருத்துவ, போசாக்கு திட்டம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள். | 623,600.00 | 623,600.00 | 609,041.97 | **97.67** |
| **27.** | 219 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | போக்குவரத்து காகிதாதி செலவுகள் | 92,953.00 | 92953.00 | 50,953.00 | **54.82** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **28.** | 226 | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் | இணையவழி கடவுச்சீட்டு வழங்கல் தொடர்பான கொடுப்பனவுகள் | 3,000.00 | 3,000.00 | - | **-** |
| **29.** | 227 | ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் | சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 6,758,880.19 | 6,758,880.19 | 6,155,853.35 | **91.08** |
| **30.** | 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | அரச தானிய களஞ்சியசாலைக்கான நடைமுறை செலவுகள் | 3,000,000.00 | 3,000,000.00 | 2,894,197.68 | **96.47** |
| **31.** | 252 | தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் | தொகை மதிப்பு திட்டங்கள், பயிற்சி நெறிகள், போக்குவரத்து கொடுப்பனவு, மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் | 7,062,913.60 | 7,062,913.60 | 6,508,237.44 | **92.15** |
| **32.** | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | ஓய்வூதியம், தபால் மற்றும் அச்சிடல் செலவு மேலதிக நேர கொடுப்பனவு | 33,362,375.00 | 33,362,375.00 | 30,220,724.04 | **90.58** |
| **33.** | 284 | வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் | வனவிலங்குகளால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகள் | 2,317,100.00 | 2,317,100.00 | 2,317,100.00 | **100** |
| **34.** | 286 | காணி ஆணையாளர் நாயக திணைக்களம் | சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 1,190,625.00 | 1,190,625.00 | 682,500.00 | **57.32** |
| **35.** | 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | மேலதிக நேர கொடுப்பனவு, தபால், மின்சார கட்டணம், சாரதி அனுமதி பத்திரம் வழங்கல் கண்காணிப்பு செலவு மற்றும் ஏனைய நடைமுறை செலவுகள் | 1,047,330.00 | 1,047,330.00 | 782,106.29 | **74.68** |
| **36.** | 326 | சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் | போக்குவரத்து மற்றும் காகிதாதி செலவுகள் | 255,000.00 | 255,000.00 | 204,556.68 | **80.22** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 37. | 327 | காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் | மாவட்ட மற்றும் பிரதேச மட்ட காணிபயன்பாட்டுக் குழுக்கூட்டம் மற்றும் காகிதாதி, போக்குவரத்து செலவு | 853,500.00 | 853,500.00 | 802,716.48 | **94.05** |
| 38. | 328 | மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம் | தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தொழில் தேடுவோருக்கான நிகழ்ச்சிகள், ஆலுவலக துப்புரவு செலவுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் | 630,615.00 | 630,615.00 | 561,399.33 | **89.02** |
| **மொத்தம்** | | | | **1,226,600,957.93** | **1,226,600,957.93** | **1,073,919,043.16** | **87.55** |

## 3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை.

| **ஆதன குறியீடு** | **குறியீட்டு விபரம்** | **31.12.2024 திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கை படி மீதி** | **31.12.2024 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி** | **ஏதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது** | **ஆறிக்கையிடல் முன்னேற்றம் %** |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 580,745,145.52 | 580,745,145.52 | - | - |
| **9152** | இயந்திரம் மற்றும் உபகரணம் | 229,835,947.89 | 229,835,947.89 | - | - |
| **9153** | காணி | 29,870,000 | 29,870,000 | - | - |
| **9154** | அருவமான சொத்துக்கள் | 0 | 0 | - | - |
| **9155** | உயிரியல் சொத்துக்கள் | 0 | 0 | - | - |
| **9160** | நடைபெறும் பணிகள் | 243,971,042.77 | 243,971,042.77 | - | - |
| **9180** | குத்தகை சொத்துக்கள் | 0 | 0 | - | - |
| **மொத்தம்** | | **1,084,422,136.18** | **1,084,422,136.18** | - | - |

## 3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. NPCG/MN/A/DSM/2024 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 30 மே 2025 |

மாவட்டச் செயலாளர்
மாவட்டச் செயலகம்
மன்னார்

**மன்னார் மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.**

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகம், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மன்னார் மாவட்டச் செயலகம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்களின் புனரமைப்புக்கும் மேம்படுத்தலுக்குமாக மாவட்ட செயலகம் மற்றும் 2 பிரதேச செயலகங்களினால் செலவு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 6,105,123 பெறுமதியான தொகை நிதியல்லாத சொத்துக்களாக காட்டப்படாமையினால் மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 6,105,123 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான 05 மின்பிறப்பாக்கிகளில் ரூபா 7,236,000 பெறுமதியான மின் பிறப்பாக்கி ஒன்றும் பெறுமதி மதிப்பிடப்படாத மின் மிறப்பாக்கி ஒன்றும் சொத்துக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்காமையால் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2021 ஆம் ஆண்டில் விபத்திற்கு உள்ளாகி திருத்திப் பாவிக்கமுடியாத நிலையில் காணப்பட்ட வாகனத்திற்கான முழுமையான காப்புறுதிப் பணம் 4,950,000 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தும் அதன் புத்தகப்பெறுமதி நீக்கப்படாமையினால் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறித்த தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1.1(ஆ) | மன்னார் மாவட்ட செயலகத்தின் 2,625 சதுர அடியை கொண்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்தின் 39 எண்ணிக்கையான செலவின விடயங்களுக்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பில் ரூபா 38,770,149 ஆனது 11 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தில் வகை மாற்றத்தின் மூலம் 7 செலவின விடயங்களிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 12,323,000 வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது எனினும் இவ் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஒதுக்கீட்டில் கூட்டுமொத்தம் ரூபா 33,119,381 ஆனது 7 சதவீதம் தொடக்கம் 27 சதவீதம் வரை சேமிப்பாக காணப்பட்டிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(இ) மாவட்ட செயலகத்தினால் வகைமாற்றத்தின் மூலம் 5 செலவீன விடயங்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 10,823,000 வகைமாற்றத்தின் மூலம் மாற்றப்பட்டிருந்தும் அவை பயன்படுத்தப்படாமல் சேமிப்பாக கூட்டுமொத்தம் ரூபா 5,833,922 ஆகக் காணப்பட்டமையினால் குறித்த வகைமாற்றமானது தேவையின் பொருட்டு வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 3 மூலதனச் செலவின வேலைகளுக்கான மதிப்பீட்டில் நிர்வாகச் செலவுக்காக ரூபா 212,828 எனும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அச் செலவினத்திற்கு ரூபா 319,416 ஆன தொகை செலவு செய்யப்பட்டமையினால் ரூபா 107,588 ஒதுக்கத்திற்கு மேலதிகமாக செலவு செய்யப்பட்டுள்ளது.

## 3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

2024 திசெம்பர் 16 ஆம் திகதிய 06/2024 இலக்கம் கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தது தொடர்பான வழிகாட்டல் 03 இன் பந்தி 3.3 இன் பிரகாரம் அறிக்கையிடல் நிறுவனங்களிலுள்ள கடப்பாடு மற்றும் பொறுப்புக்களை 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கடப்பாட்டு இலக்கத்திற்கு அமைவாக வெளிப்படுத்தப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பொறுப்பு மற்றும் கடப்பாடுகள் கூற்றில் ரூபா 1,482,101 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

### 3.3.1 மீண்டெழும் செலவினம்

(அ) 2024 ஆம் ஆண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் 17 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களங்களின் கூட்டுமொத்தம் 65 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 11,700,983 சேமிக்கப்பட்டிருந்தது. இது வினைத்திறனற்ற முகாமையின் செயற்பாடாக காணப்படுகின்றது.

(ஆ) 2024 ஆம் ஆண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் ஏனைய 02 அமைச்சுக்கள் மற்றும் 5 திணைக்களங்களால் 10 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 360,296 சேமிக்கப்பட்டிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 3.3.2 மூலதனச் செலவினம்

மீளாய்வாண்டில் 09 அமைச்சுக்களின் 13 மூலதனச் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 127,960,849 ஆனது 10 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரை பயன்படுத்தப்படாது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது.

### 3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.**

| இல. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்கள் | | |
